# 6

# இறைக் கொள்கையும் அரச நிதியும்

இறைத்துறையின் செலாற்றம் 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் முன்னேற்றமொன்றினைக் காட்டியது. இக்காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறை 2015இன் தொடர்பான காலப்பகுதியின் 6.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7.0 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தமைக்கு வரி அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமொன்றாக மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 10.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 10.5 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு இக்காலப்பகுதியில் மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். இதன் விளைவாக, 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.4 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 3.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்கள் ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவில் பகிர்ந்தளிக்கப்பட்டமை மற்றும் அரச பிணையங்களின் வெளிநாட்டு உடமைகளின் தேறிய வெளிப்பாய்ச்சல் என்பனவற்றிற்கிடையில் இத்திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு அரசாங்கம் முக்கியமாக உள்நாட்டு மூலங்களிலேயே தங்கியிருந்தது. உள்நாட்டு நிதியிடலில், வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய கடன்பாடுகள் 2016இற்கான வரவு செலவுத்திட்டத்தின் ஆண்டு மதிப்பீடான ரூ.182.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.234.3 பில்லியனுக்கு அதிகரித்தன. 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் இறைச் செயலாற்றம் சில முன்னேற்றங்களைக் காட்டிய போதும் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் சவால் நிறைந்ததாக இருக்கும் என்பதால் சில அரசிறைகளை அதிகரிப்பதற்காக, குறிப்பாக, பெறுமதிசேர் வரிக்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் தாமதங்களின் காரணமாக, ஆண்டு அரசிறை இலக்குகளை எய்துவதற்கு புதிய அரசிறையை அதிகரிக்கின்ற வழிமுறைகள் தேவைப்படுகின்றன. மேலும், வட்டிக் கொடுப்பனவுகள் 2016 இற்காக ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட தொகையிலும் பார்க்க உயர்வாக இருக்குமென மதிப்பிடப்பட்டதுடன் இது இறை நிலுவைகளின் மீது மேல் நோக்கிய அழுத்தத்தினையும் தோற்றுவிக்கிறது. இப்பின்னணியில் 2016இல் மொ.உ.உற்பத்தியின் 5.4 சதவீதம் கொண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாகுறை இலக்கிடலைப் பூர்த்தி செய்வது சவால்மிக்க பணியாகவே இருக்கும்.

## இறைக் கொள்கை வழிமுறைகள்

- **2016இல் இறைக் கொள்கை வழிமுறைகள் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினையும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அரச படுகடன் விகிதத்தினையும் குறைக்கும் விதத்தில் இறைத் திரட்சிப்படுத்தும் செயன்முறையினை வலுப்படுத்துவதனை நோக்கி நெறிப்படுத்தப்பட்டது.** இவ்விலக்குகளை எய்தும் பொருட்டு அரச அரசிறையினை உயர்த்துவதற்கும் மீண்டெழும் செலவினத்தினை சிக்கனப்படுத்துவதற்குமாக அரசாங்கத்தினால் பல கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- **அரசாங்கத்தின் நடுத்தர கால குறிக்கோள் யாதெனில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2020 அளவில் மொ.உ.உற்பத்தியின் 3.5 சதவீதத்திற்கு குறைப்பதேயாகும்.** இதனுடன் இசைந்து செல்லும் விதத்தில் இறங்குமுக வரிகளையும் நடுத்தர காலத்தில் குறைக்கும் அதேவேளையில் நேரடி மற்றும் மறைமுக வரி விகிதத்தினை 2015இல் நிலவும் விகிதமான 19:81 இலிருந்து 40:60 இற்கு அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2015 நவெம்பரில் சமர்ப்பிக்கப்பட்ட 2016 இற்கான வரவு செலவுத்திட்டம், வரி முறைமைகள் அதேபோன்று ஓய்வூதிய முறைமை, வளமாக்கி உதவுதொகை மற்றும் அரசுடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளின் சீர்திருத்தங்கள் என்பனவற்றுடன் தொடர்பான முக்கியமான பல வழிமுறைகளையும் பொருளாதாரத்திலுள்ள மற்றைய துறைகளுடன் தொடர்பான பல கொள்கைகளையும் முன்மொழிந்தது. 2016இன் ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தின்படி, திரண்ட பற்றாக்குறை 2016இன் மொ.உ.உற்பத்தியில் 5.9 சதவீதத்திற்குக் குறைவடையுமென எதிர்பார்க்கப்பட்டது. அதன் பின்னர் 2016 மார்ச்சில் ஏற்பட்ட அபிவிருத்தியில் உலகளாவிய பொருளாதாரச் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களின் பின்னணியில் குறிப்பிட்ட வரிகளுக்கு அரசாங்கம் திருத்தங்களை அறிவித்த வேளையில் 2016இற்கான வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மொ.உ.உற்பத்தியில் 5.9 சதவீதம் கொண்ட ஆரம்ப இலக்கிடல் மட்டத்திற்குப் பதிலாக 2016இல் மொ.உ.உற்பத்தியில் 5.4 சதவீதத்திற்கு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மேலும் குறைப்பதற்கான அரசாங்கத்தின் கடப்பாடுகளை எடுத்துக்காட்டின. எனவே, இதன் பின்னர் 2016இற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகள், பொதுவாக இவ்வாய்வில் அடிப்படையாகக் கருதப்படுகின்றன.

- **வரவு செலவுத்திட்ட இலக்கிடல்களுடன் ஒத்துச்செல்லும் விதத்தில் மொ.உ.உற்பத்திக்கான அரச அரசிறை விகிதத்தினை அதிகரிக்கும் நோக்குடன் 2016இற்கான வரவு செலவுத்திட்டத்தில் பல அரசிறை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இதன்படி, வருமான வரித் தளத்தினை விரிவாக்குவதற்கு வழிமுறைகள் முன்மொழியப்பட்ட வேளையில் தற்போதுள்ள வரிமுறைமைகள் எளிமைப்படுத்தப்பட்டன. வங்கித் தொழில் மற்றும் நிதியியல் பணிகள், காப்புறுதித் தொழில் துறை, வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள், குடிவகை, புகையிலை, லொத்தர், பந்தயம் மற்றும் சூதாட்டம் தவிர்ந்த அனைத்துத் துறைகளுக்கும் 17.5 சதவீதம் கொண்ட தனி வரி வீதமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. 40 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதம் குடிவகை, புகையிலை, லொத்தர், பந்தயம் மற்றும் சூதாட்டம் என்பனவற்றிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகள், காப்புறுதித் தொழில் துறை மற்றும் வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள் 28 சதவீதத்தில் வரிகளைச் செலுத்தப் பொறுப்புடையனவாக இருந்தன. மேலும், நிதியியல் வர்த்தகப்படுத்தல், குடிவகை, புகையிலை, லொத்தர், பந்தயம் மற்றும் சூதாட்டம் தவிர்ந்த ஏதேனும் நடவடிக்கையிலிருந்தான இலாபத்தின் மீது தனிப்பட்டவர்களுக்கு பிரயோகிக்கத்தக்க உயர்ந்தபட்ச வரி வீதம் 17.5 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டது. மேலும், பொருளாதாரப் பணிக் கட்டணம் 0.25 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் இலாபத்தினை உருவாக்கும் வியாபாரங்களுக்கும் ஆண்டொன்றிற்கு ரூ.120 மில்லியன் உயர்ந்தபட்சப் பொறுப்புக்களைக் கொண்ட வியாபாரங்களுக்கும் வழங்கப்பட்ட விலக்கல்கள் அகற்றப்பட்டன.

- **அரச அரசிறையினை உயர்த்தும் நோக்குடன் பெறுமதிசேர் வரிக்கும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்கும் பல வழிமுறைகள் முன்மொழியப்பட்டன.** 2016இற்கான வரவு செலவுத்திட்டம் பணிகள் துறைக்கு பெறுமதிசேர் வரி வீதத்தினை பூஜ்யம் மற்றும் 11 சதவீதம் என்ற இரண்டு வரிப் பிரிவுகளிலிருந்து பூஜ்ய வீதம் 8 சதவீதம் கொண்ட நியம வீதம் மற்றும் 12.5 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதம் என மூன்று பிரிவுகளாகத் திருத்துவதற்கு முன்மொழிந்துள்ளது. மேலும், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்தின் மீது விதிக்கப்படத்தக்க பெறுமதிசேர் வரி

2016 சனவரி 01ஆம் நாளிலிருந்து அகற்றப்படுவதற்கு முன்மொழியப்பட்டது. மேலும் காலாண்டொன்றிற்கான ரூ.3.75 மில்லியன் கொண்ட கீழ்மட்ட பெறுமதிசேர் வரியினை காலாண்டொன்றிற்கு ரூ.3.0 மில்லியனுக்கு திருத்த முன்மொழியப்பட்டுள்ளது. எனினும், 2016 மாச்சு 4இல் 2016 மே 02 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 15 சதவீதம் கொண்ட உயர்ந்த பெறுமதிசேர் வரி வீதத்தினை விதிக்க அமைச்சரவை ஒப்புதலை வழங்கிய வேளையில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்திற்கு வழங்கப்பட்ட விலக்கல்கள் அகற்றப்பட்டன. 2016 யூன் 11ஆம் நாள் இலங்கை உயர் நீதிமன்றம் பெறுமதிசேர் வரிக்கான திருத்தங்களை இடைநிறுத்தியதுடன் உயர் நீதிமன்றத்திற்கு செய்யப்பட்ட மனு தொடர்பில் பதிலிறுப்பதனைத் தொடர்வதற்கான அனுமதியினை வழங்கியது. 2016 ஓகத்து 09இல் மாண்புமிகு சபாநாயகர் பெறுமதிசேர் வரியிலான மாற்றங்களுக்கான திருத்தங்களில் அரசியல் யாப்புச் செயன்முறைகளை பின்பற்றத் தவறியிருந்தமை பற்றி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புப் பற்றி பாராளுமன்றத்திற்கு அறிவித்தார். அதன் பின்னர் புதிய பெறுமதிசேர் வரி (திருத்தம்) மசோதா அமைச்சரவை அமைச்சர்களினால் 2016 செத்தெம்பர் 13ஆம் நாளன்று ஒப்புதலளிக்கப்பட்டதுடன் இது 2016 ஒத்தோபர் 26 அன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. 2016 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் தற்போதைய 2 சதவீதமான 4 சதவீதத்திற்கு அதிகரிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்ட அதேவேளை, மின்வலு, உராய்வு நீக்கி மற்றும் தொலைத்தொடர்பூட்டல் பணிகள் மீது தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியின் கீழ் வழங்கப்பட்ட விலக்கல்கள் அகற்றப்பட்டு தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியின் மொத்தப் புரள்வு வரி செலுத்த வேண்டிய கீழ்மட்டம் காலாண்டு ஒன்றிற்கு ரூ.3.75 மில்லியனிலிருந்து ரூ.3.0 மில்லியனுக்குக் குறைப்பதற்கும் முன்மொழியப்பட்டது. ஒரு புதிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (திருத்தம்) மசோதாவொன்றும் 2016 ஒத்தோபர் 26 அன்று பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

- **மூன்று பிரிவுத் தீர்வை அமைப்பினை அறிமுகப்படுத்தியதன் மூலம் சுங்கத் தீர்வை அமைப்பு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வேளையில், தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களின் மீது சுங்கத்தீர்வை வீதங்கள் அதிகரித்தன.** 25 சதவீதம், 15 சதவீதம், 7.5 சதவீதம் மற்றும் விலக்கல் என்பனவற்றைக் கொண்ட நான்கு பிரிவுத் தீர்வை அமைப்பு, 2015 நவெம்பர் 20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 30 சதவீதம், 15 சதவீதம் மற்றும் விலக்கல் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்ட அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் திருத்தப்பட்டது. மேலும், துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வை முன்னைய 5.0 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. எனினும், குறிப்பிட்ட இலத்திரனியல் மற்றும் மின்னியல் விடயங்களுக்கு 2.5 சதவீதம் கொண்ட தாழ்ந்த வீதம் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் கட்டுமானம், பாற்பண்ணை மற்றும் வேளாண்மை தொழில் துறைகளுக்காகப் பயன்படுத்தப்படும் சில பொறிகள் மற்றும் எந்திரங்கள் மீதான துறைமுகங்கள், வானூர்திநிலையத் தீர்வை 2016 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு அகற்றப்பட்டது.

- **பல உணவுப் பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வைகள், உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பினை வழங்கும் பொருட்டு பல தடவைகள் திருத்தப்பட்ட வேளையில் உள்நாட்டுச் சந்தை விலைகளில் ஏற்படும் தளம்பல்களைக் குறைக்க இது பயன்படுத்தப்பட்டது.** இதன்படி, 2016 மாச்சில் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை முறையே கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இற்கும் கி.கிறாமொன்றிற்கு ரூ.35 இற்கும் அதிகரித்ததுடன் உள்நாட்டு நிரம்பல் நிலைமைகளை பரிசீலனையில் கொண்டு 2016 ஓகத்தில் இவ்விரண்டு உணவு விடயங்களின் மீதுமான சிறப்புப் பண்டத் தீர்வை மீண்டும் கி.கிறாமொன்றிற்கு ரூ.40 இற்கு உயர்த்தப்பட்டது. மேலும், சின்ன வெங்காயத்தின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் வெள்ளைச் சீனி மற்றும் மண்ணிறச் சீனி என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2016 செத்தெம்பர் 16 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் முறையே கி.கிறாமொன்றிற்கு ரூ. 2 இற்கும் கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இற்கும் அதிகரிக்கப்பட்டது. மேலும், மரக்கறி எண்ணெய் மற்றும் பெருஞ்சீரகம் என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையும் இவ்வாண்டுப் பகுதியில் அதிகரிக்கப்பட்டது. மேலும்,

2016 மே 02ஆம் திகதியிலிருந்து பெறுமதிசேர் வரியின் திட்டமிடப்பட்ட அதிகரிப்பின் காரணமாக தோன்றக்கூடிய பொதுமக்களின் வாழ்க்கைச் செலவினைக் குறைக்கும் நோக்கத்துடன் 2016 யூலை 14ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பதினேழு உணவு விடயங்கள் தொடர்பில் உயர்ந்தபட்சச் சில்லறை விலைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வுணவு விடயங்கள் சிவப்புப் பருப்பு, நெத்தலிக் கருவாடு, பயறு, சீனி, கோதுமை மா, பால்மா, புறொயிலர் கோழி இறைச்சி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய், கருவாடு, சஸ்ரஜன் மற்றும் மாசிக் கருவாடு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

- **வரி நிருவாகத்தினை மேம்படுத்துவதற்கும் வரிச் சேகரிப்புக்களை உயர்த்துவதற்குமாக அரசிறை முகவர்களின் செயன்முறைகளை விரைவுபடுத்துவதன் மீது வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.** வரி செலுத்துபவர்கள் அவர்களது வரிக் கொடுப்பனவு களுக்காக அதேநேரத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும் பெறுமதிசேர் வரிகள், எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, பிடித்துவைத்தல் வரி மற்றும் உழைக்கும் பொழுதே செலுத்தும் வரி என்பனவற்றின் கூற்றுக்களை சமர்ப்பிக்கவும் இயலுமைப்படுத்தும் உள்நாட்டரசிறைத் திணைக்களத்தில் அமைந்துள்ள அரசிறை நிருவாக முகாமைத்துவத் தகவல் முறைமையானது 2016ஆம் ஆண்டுப் பகுதியில் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. அதேவேளை, இலங்கைச் சுங்கம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகர்களுக்கு வசதியளிப்பதற்காகத் தேவையான அனைத்து அனுமதிகள், சான்றிதழ்கள், இறுதிச் சான்றிதழ்கள் மற்றும் ஒப்புதல்கள் என்பனவற்றை வழங்குவதற்காக ஒரே கூரையின் கீழ் அலுவலகமொன்றினை நிறுவியது. நிதி அமைச்சில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை நிதி அமைச்சின் முக்கிய திணைக்களங்களை தன்னியக்கப்படுத்துவதனை பிரதான நோக்காகக் கொண்டிருக்கும். இம்முறைமையின் கீழ் நிதி அமைச்சிற்காக புதிய வெப்தளமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு 2016 ஏப்பிறலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வரவு செலவுத்திட்டமிடல் மாதிரியினை அபிவிருத்தி செய்து வழமைப்படுத்தும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளதுடன் இது 2017இன் வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிக்கும் வேலைக்காக தற்போது தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திலுள்ள வரவு செலவுத்திட்ட உருவாக்க முறைமைக்குச் சமாந்தரமாகப் பயன்படுத்தப்படும். மேலும், திறைசேரி முகாமைத்துவம், அரசிறை முகாமைத்துவம், வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு, கொள்வனவு முகாமைத்துவம், செலவின முகாமைத்துவம், பொதுப் பேரேடு மற்றும் முறைமை நிருவாகம் என்பனவற்றினை உள்ளடக்கிய பயன்படுத்துநர் ஏற்பு பரீட்சிப்பின் முதல் சுற்று முன்னோடி நடைமுறைப்படுத்தலொன்றாக நிதி அமைச்சிலும் நல அமைச்சிலும் 2016 நவெம்பரில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதேவேளை, செலவிடல் முகவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களின் மீளாய்வுச் செயன்முறைகளை வலுப்படுத்தும் பொருட்டு நிதி அமைச்சின் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் கீழ் வரவு செலவுத்திட்ட நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்புப் பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கிறது. இதன்படி, தொடர்பான அமைச்சர்கள் மற்றும் முகவர்களினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் நிதியியல் மற்றும் பௌதீக முன்னேற்றங்கள் தொடர்பிலான கவனத்தினைச் செலுத்துவதற்காக கண்காணிப்புச் செயற்பாடுகள் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும். மேலும், செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற விதந்துரைப்புக்களின் அடிப்படை யில் அரச முகவர்களுக்கும் நிறுவனங்களுக்குமான மாதாந்தக் காசுப்பாய்ச்சலை விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக நிதி அமைச்சின் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **அரச செலவினம் பொருத்தமான விதத்தில் முகாமைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் 2016இல் செலவினப் பக்கத்தில் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கை எண் 01/2016இன் கீழ், அனைத்துச் செலவிடல் முகவர்களும் அரச முகவர்களுக்கான ஊர்திகளின் கொள்வனவிற்காக 2016 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட தொழிற்பாட்டு குத்தகை முறையினை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டனர். இது முன்னைய முறைகளிலும் பார்க்கக் கூடியளவு செலவுச் சிக்கனமானதாக இருக்குமென கருதப்படுகின்றது.

- **பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 03/2016 இற்கு இணங்க 2016 சனவரி 01 இலிருந்து அரச பணியிலுள்ள ஊழியர்களுக்காக ஐந்து கட்டங்களைக் கொண்ட புதிய சம்பள அமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.** இது, மீளத் தொழில்புரியும் (பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 31/2011 மற்றும் 18/2012 நியதிகளின்படி) ஓய்வுபெற்ற அரச அலுவலர்களுக்குச் செலுத்தப்படும் ஓய்வூதியமல்லா சிறப்புப்படி மற்றும் ரூ.10,000 கொண்ட இடைக்கால மாதாந்தப் படி (பொது நிருவாகச் சுற்றறிக்கைகள் இல. 24/2014, 24/2014(1) மற்றும் 05/2015 என்பனவற்றின் நியதிகளில்) என்பனவற்றினை உள்ளடக்குகிறது. அதேவேளை அரச பணியிலுள்ள ஊழியர்களின் சம்பளத்தினை தற்போதுள்ள சம்பளத்திலிருந்து புதிய சம்பள அளவுகளுக்கு 2020 வரை ஐந்து கூட்டங்களின் கீழ் படிப்படியாக மாற்றுவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது.

- **ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயன்முறைகளின் பதிவுகளை மேம்படுத்தி விரைவுபடுத்தும் பொருட்டு ஓய்வூதிய திணைக்களம் முழுமையாகத் தன்னியக்கப்படுத்தப்பட்ட அதேநேர விண்ணப்பச் செயன்முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.** இதன்படி, விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திற்கு அரச ஊழியர்களைப் பதிவு செய்வதற்காக முழுமையாக தன்னியக்கப்படுத்தப்பட்ட கணனி வழி அதேநேர விண்ணப்பச் செயன்முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்செயன்முறையானது முன்னர் கைகளால் செய்யப்பட்டது. மேலும், ஓய்வூதியதாரர்கள் 2016 ஒத்தோபர் 10ஆம் திகதியிலிருந்து ஓய்வூதிய முகாமைத்துவ முறைமையினூடாக கணனி வழி அதேநேர முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டனர். ஓய்வூதிய பகிர்ந்தளிப்புக்கள் அஞ்சல் திணைக்களத்தின் கணனி வழி அதேநேர கொடுப்பனவுச் செயன்முறையினூடாக முகாமைப்படுத்தப்படுகின்றன. மேலும், இலங்கை புகைவண்டிப் பகுதி மற்றும் மொபிடெல் (பிறைவேற்) லிமிடெட்டின் ஒத்துழைப்புடன் ஓய்வூதியதாரர்களுக்காக அதேநேர புகைவண்டி ஆணைச்சீட்டு முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- **ஆண்டுப்பகுதியில் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் மெதுவான போக்கு காணப்பட்டமைக்கு வெளிநாட்டு நிதியிடல் செயற்றிட்டக் கடன்களின் கீழான குறைந்த பகிர்ந்தளிப்புக்களே முக்கிய காரணமாகும்.** மொறகககந்த மற்றும் களுகங்கை செயற்றிட்டங்கள் போன்ற தற்பொழுது இடம்பெற்றுவரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் இவ்வாண்டுப் பகுதியிலும் தொடர்ந்தன. அதேவேளை, விரைவுப் பாதையின் அபிவிருத்தி மற்றும் தேசிய வீதிகளை அகலப்படுத்தி மேம்படுத்தும் வேலைகள் தொடர்ந்தன. இதன்படி, வெளிச்சுற்று நெடுஞ்சாலை - கடவத்தையிலிருந்து கெரவிலப்பிட்டிய பிரிவின் கட்டம் - III மற்றும் தென்பகுதி விரைவுப்பாதை விரிவாக்கச் செயற்றிட்டம் - மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டைப் பிரிவு என்பனவற்றின் நிருமாண வேலைகள் இவ்வாண்டுப் பகுதியிலும் தொடர்ந்தன. மேலும், இதே காலப்பகுதியில் மத்திய விரைவுப் பாதையை நிருமாணிப்பதற்கான நிலத்தினை கையேற்பதற்காக முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய விரைவுப் பாதை - மீரிகமவிலிருந்து குருநாகல் வரையான கட்டம் ஐஐஇன் நிருமாண வேலைகள் 2016 ஒத்தோபரில் ஆரம்பமாகியுள்ளன. அத்துடன், றுவன்புர விரைவுப்பாதைக்கான சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்வதும் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் இதன் நிருமாண வேலைகள் 2017இல் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **அரசாங்கம் உணவு ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டங்கள், சமுர்த்தி நிவாரணம், வயது முதிர்ந்தோர் படி, சிறுநீரக நோயாளர்களுக்கான சிறப்புக் கொடை மற்றும் வளமாக்கி உதவுதொகை போன்ற நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தொடர்ந்தும் வளங்களை வழிப்படுத்தியது.** இதன்படி, பிள்ளைகளினதும் கர்ப்பிணித் தாய்மார்களினதும் ஊட்டச்சத்துக்களை மேம்படுத்தும் நோக்குடன் போசனமல்ல, திரிபோசா நிகழ்ச்சித்திட்டம், உடன்பால் மற்றும் பள்ளிக்கூட ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டம் போன்ற ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டுப் பகுதியிலும் தொடர்ந்தன. அதேவேளை, வீட்டலகுகளுக்கான மாற்றல்களை ஒழுங்குமுறைப்படுத்துவதன் ஒரு பகுதியாக, 50 கி.கிறாம் வளமாக்கிப் பொதியினை ரூ.350 இற்கு வழங்கப்படுகின்ற முறைக்குப் பதிலாக, நெல் வேளாண்மையாளரொருவருக்கு உயர்ந்தபட்சம் இரண்டு எக்டேயர்களுக்கு எக்டேயரொன்றுக்கு ரூ.25,000 கொண்ட படியொன்றினை வழங்கும் விதத்தில் அரசின் வளமாக்கி உதவுதொகைத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டது. மேலும், அரசாங்கம் வளமாக்கி உதவுதொகைத் திட்டத்தினை 2016இல் தேயிலை,

தெங்கு மற்றும் இறப்பர் செய்கையாளர்களுக்கும் விரிவாக்கியது. இதன் கீழ் ஆண்டொன்றிற்கு எக்டேயரொன்றிற்கு முறையே ரூ.15,000, ரூ.9,000 மற்றும் ரூ.5,000 கொண்ட காசுக் கொடைகளை வழங்கியது.

- **அரசுடமையாக்கப்பட்ட முக்கிய தொழில்முயற்சிகளின் நிதியியல் நிலைமைகளையும் தொழிற்பாடுகளையும் வலுப்படுத்துவதற்காக 2016ஆம் ஆண்டுப் பகுதியில் பல முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.** இதன்படி, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதியியல் தடைகளை பரிசீலனையில் கொள்கையில் நகர நீர்வழங்கல் செயற்றிட்டங்களின் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் 50 சதவீதமும் கிராமிய நீர்வழங்கல் செயற்றிட்டத்தில் 75 சதவீதமும் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட வேண்டியிருந்தது. மேலும், 2015இல் சிறிலங்கன் எயார்லையின்சுக்கு வழங்கப்பட்ட இரண்டு வசதிக் கடிதங்களும் சிறிலங்கன் எயார்லையின்சின் நிதியியல் நிலைமைகள் தேய்வடைந்தமையினைப் பரிசீலனையில் கொண்டு 2016 திசெம்பர் 31 வரைக்கும் நீடிக்கப்பட்டன. மேலும், சிறிலங்கன் எயார்லையின்ஸ் மற்றும் மிகின் லங்கா லிமிடெட் இரண்டினதும் அவசர மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக அவற்றிற்கு இரண்டு வசதிக் கடிதங்கள் வழங்கப்பட்டன. எனினும், சிறிலங்கன் எயார்லையின்சின் தொடர்ச்சியான நிதி இழப்பு நிலைமையினைப் பரிசீலனையில் கொண்டு, சிறிலங்கன் எயார்லையின்சினை வர்த்தக ரீதியில் ஆற்றல்வாய்ந்த வியாபார நிறுவனமொன்றாக நடத்துவதற்குப் பொருத்தமான வியாபாரப் பங்காளரொருவரைத் தெரிவுசெய்வதன் மூலம் அதனை மீளவமைக்கும் பொருட்டு தலைமை முகாமையாளராக அரசாங்கம் தேசிய சேமிப்பு வங்கியினை நியமித்தது.

- **படுகடன் முகாமைத்துப் பக்கத்தில் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் 2016இல் பொதுப்படுகடன் முகாமைத்துவ உபாயம் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்ட வேளையில், குறைந்தபட்ச இடர்நேர்வுகளுடன் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் அரசின் நிதியிடல் தேவைகளுக்குப் போதுமான நிதியிடலைக் கிடைப்பதனையும் உறுதிப்படுத்தியது.** இதன்படி, 2016 ஒகத்து 4ஆம் நாள், நியாயமான சந்தை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காகவும் அரச பிணையங்கள் சந்தையின் விளைவு நன்மைகளை அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் கிடைக்கச் செய்வதனையும் நோக்காகக் கொண்டு மத்திய வங்கி முதற்றடவையாக இரண்டாந்தரச் சந்தையில் அரச பிணையங்களின் உண்மையான வர்த்தகப்படுத்தல் மீதான வர்த்தகப்படுத்தல் புள்ளிவிபரங்களின் சாராம்சத்தினை வெளியிடத் தொடங்கியது. அரச பிணையங்களின் வெளிப்படையான தன்மையினை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களுக்காக அனைத்து முதனிலை வணிகர்களும் வர்த்தக வங்கிகளும் புளும்போர்க் இலத்திரனியல் முறி-வர்த்தகப்படுத்தல் தளத்தில் இணைந்து கொண்டன. இதன் விளைவாக, அனைத்து முதனிலை வணிகர்களும் வங்கிகளும் அவர்களுக்கிடையேயான வர்த்தகத்தினை தளத்தில் மேற்கொள்ளுமாறும் முதலீட்டாளர்களுடனான ரூ.50 மில்லியன் மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து அரச பிணையங்களினதும் உடனடி விற்பனையை 30 நிமிடங்களுக்குள் அறிவிக்குமாறும் தேவைப்படுத்தப்பட்டன. இது மத்திய வங்கி, தொடர்பான கொடுக்கல்வாங்கல்களை அது இடம்பெற்றுவரும் அடிப்படையில் கண்காணிப்பதனை இயலச்செய்யும். மேலும், இத்தகவல்களை வெளியிடுவது அரச பிணையங்கள் சந்தை நிலைமைகளின் தற்போதைய நிலைமையினை முதலீட்டாளர்கள் ஆய்வு செய்வதற்கு உதவியாக அமைகின்ற வேளையில், வெளிப்படையான தன்மை, விலைகளைக் கண்டறிந்து கொள்ளுதல் மற்றும் மற்றைய நிதியியல் சந்தைகளுக்கு சமாந்தரமாக அரச பிணையங்கள் சந்தையும் பரந்தளவில் சென்றடைவதனையும் ஊக்குவிக்கும். மேலும், மத்திய வங்கி மத்திய இணைத்தரப்பு முறைமையுடன் பிரத்தியேக இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளமொன்றினை ஏற்படுத்துவதற்கான கொள்வனவுச் செயன்முறைகளை ஆரம்பித்துள்ளது. இது, மற்றைய அபிவிருத்தியடைந்த நிதியியல் சந்தைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் அதேநேர அடிப்படையில் சந்தைத் தகவல்களை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் அரச பிணையங்கள் சந்தையையும் பன்னாட்டு நியமங்களுக்கேற்ப அபிவிருத்தி செய்யும்.

- **பன்னாட்டு நியமங்களுக்கு இணைவாக முதனிலை வணிகர் சந்தையில் ஒழுங்குவிதிகளையும் மேற்பார்வையையும் பலப்படுத்துவதற்குப் பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** இதன்படி, அரச பிணையங்கள் சந்தையின்

ஒழுங்குவிதிகளும் மேற்பார்வையும் மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், மத்திய வங்கி, சந்தை அபிவிருத்திகள் மீதான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் தெளிவான வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஏல நாட்காட்டியைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அனைத்து முதனிலை வணிகர்களுடனும் விலைக்குறிப்பீட்டிற்கு முன்னரான கூட்டங்களை நடத்துவதற்கும் அதேவேளையில், விளம்பரம் செய்யப்பட்ட மற்றும் பகிரங்க ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகள் தொடர்பில் சிறந்த பன்னாட்டு நடைமுறைகளைப் பின்பற்றவும் தீர்மானித்தது. அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் தீவிரமாக பங்கேற்பதற்காக ஊழியர் சேம நிதியம் தொடர்பிலும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. உலகளாவிய சிறந்த நடைமுறைகள் மற்றும் உள்நாட்டு நிலைமைகள் என்பனவற்றின் அடிப்படையில் போட்டித்தன்மை மற்றும் போட்டியற்றதன்மை இரண்டுடனும் கூடிய விலைக்குறிப்பீடுகளுடன் அரச பிணையங்களின் வழங்கலுக்காக திட்டமிடப்பட்ட கலப்பு முறையினை அறிமுகப்படுத்துவது அரச முறிகள் சந்தையில் பெருமளவு நம்பிக்கையினை மனதில் பதிப்பதனை நோக்கிச் செய்யப்பட்ட முக்கியமான நடவடிக்கையொன்றாகும். அதேவேளை, முதனிலை வணிகர் அல்லாத வங்கிகளினால் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு அரச பிணையங்களின் உடனடி இரண்டாந்தரச் சந்தை விற்பனைகளை மேற்கொள்வது தொடர்பான பல வழிமுறைகள் நடைமுறைப்படுத்துவதற்கு ஆயத்தமான நிலையில் காணப்படுகின்றன.

- **அரசாங்கம் அதன் 10ஆவது நாட்டிற்கான பன்னாட்டு முறியினை வெற்றிகரமாக வழங்கியமையானது இலங்கை மீதான முதலீட்டாளர்களின் நம்பிக்கை மேம்பட்டிருப்பதனை பிரதிபலிக்கிறது.** இதன்படி, பிறெக்ஸிட் தாக்கத்தினைத் தொடர்ந்து உலகளாவிய சந்தையில் உயர்ந்த தளம்பல்கள் காணப்பட்டமைக்கிடையிலும் அரசாங்கம் 2016 யூலையில் 5.5 ஆண்டுகளையும் (ஐ.அ.டொலர் 500 மில்லியன்) 10 ஆண்டுகளையும் (ஐ.அ.டொலர் 1.0 பில்லியன்) வழங்குகின்ற முறையே 5.750 சதவீதம் மற்றும் 6.825 சதவீதம் கொண்ட விளைவு வீதங்களில் அதன் முதலாவது இரட்டை தொகுதியினூடாக ஐ.அ.டொலர் 1.5 பில்லியனைத் திரட்டிக் கொண்டது. மேலும், அரசாங்கம் 2016 யூனில் அரசாங்கம் 3 ஆண்டு கால முதிர்ச்சியைக் கொண்ட ஐ.அ.டொலர் 300 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதியினை (கூட்டுக் கடன்கள்) வழங்கியது. மேலும், அரசாங்கம் 2016 செத்தெம்பரில் 3 ஆண்டு கால முதிர்ச்சியைக் கொண்ட ஐ.அ.டொலர் 400 மில்லியன் பெறுமதியான மற்றுமொரு வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதியை வழங்கியது.

- **நாட்டிற்கான பன்னாட்டு தரமிடல் முகவர்கள் 2016இல் இலங்கையின் நாட்டிற்கான கொடுகடன் தரமிடலுக்கு சில திருத்தங்களைச் செய்துள்ளன.** 2016 பெப்புருவரி 29ஆம் திகதி பிட்ஜ் இலங்கையின் வெளிநாட்டு நாணயத் தரமிடலான “பீ- இனை “பீ+” இற்கும் இலங்கையின் நாட்டிற்கான தரமிடல் தோற்றப்பாட்டினை “உறுதியானது” என்ற நிலையிலிருந்து “எதிர்மறை” நிலைக்கும் திருத்திக் கொண்டமையின் மூலம் அதிகரித்துச் செல்லும் மீள்நிதியிடல் இடர்நேர்வுகள், குறிப்பிடத்தக்க படுகடன் முதிர்ச்சிகள், பலயீனமான அரச நிதி, வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் உயர்ந்த வெளிநாட்டு நாணயப் படுகடன் விகிதம் என்பனவற்றின் காரணமாக இலங்கை பெருமளவிற்குப் பாதிக்கக்கூடியதாக இருக்கும் தன்மையினை எடுத்துக்காட்டியது. ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் 2016 மாச்சு 26இல் அதன் நீண்ட கால தரமிடலான “பீ+” இனையும் குறுங்கால நாட்டிற்கான கொடுகடன் தரமிடலான “பீ” இனையும் உறுதிப்படுத்திக் கொண்ட போதும், இலங்கை மீதான அதன் நீண்ட கால வெளிநாட்டு நாணயக் கொடுகடன் தரமிடலை “உறுதியான” தரமிடலிலிருந்து “எதிர்மறை” யான தரமிடலுக்கு மாற்றியமையானது இலங்கையின் வெளிநாட்டுத் திரவத்தன்மை மீதான அழுத்தத்தினையும் பலயீனமான அரச நிதியினையும் எடுத்துக்காட்டியது. மூடிஸ் இன்வெஸ்டர் சேர்விசஸ் உம் இலங்கை மீதான அதன் “பீ1” நாட்டிற்கான தரமிடல் மீதான தோற்றப்பாட்டினை 2016 யூன் 20இல் ‘உறுதியான’ நிலையிலிருந்து ‘எதிர்மறை’யான நிலைக்கு மாற்றிக்கொண்டமையானது குறைவடைந்த மொ.உ.உற்பத்தி வளர்ச்சிச் சூழலொன்றில் இலங்கையின் இறை அளவையில் சில பலயீனங்கள் காணப்பட்டமையினை எடுத்துக்காட்டியதுடன் இது மீண்டும் புதுப்பிக்கப்பட்ட சென்மதி நிலுவை அழுத்தத்திற்கும் அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்பட்ட இறைச் சீர்த்திருத்தங்களின்

தாக்கம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவாக இருப்பதற்கும் வழிவகுக்கக்கூடும் என்பதுடன் இது இறை மற்றும் பொருளாதார செயலாற்றத்தினை மேலும் நலிவுறச் செய்யும்.

- **அதேவேளை, அரசாங்கத்தின் பொருளாதாரச் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவுவதற்காக குறிப்பாக, இறை உறுதிப்பாட்டினையும் நாட்டின் சென்மதி நிலுவை நிலைமையினையும் வலுப்படுத்துவதற்காக 2016 யூன் 03ஆம் நாளன்று அரசாங்கம் ப.நா. நிதியத்துடன் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டமொன்றினை மேற்கொண்டது.** இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்ப நிலுவை முக்கிய இறை இலக்காக இணங்கிக் கொள்ளப்பட்டதுடன் 2016 சனவரி - யூன் காலப்பகுதியில் ஆரம்ப நிலுவைக்கான ப.நா.நிதிய கணியம்சார் செயலாற்றப் பிரமாணம் ரூ.46.0 பில்லியன் கொண்ட பற்றாக்குறையாகக் காணப்பட்டது. கிடைக்கத்தக்க பிந்திய தகவலின்படி 2016 சனவரி - யூன் காலப்பகுதிக்கான ஆரம் நிலுவைக்கான செயலாற்றப் பிரமாணம் ஈடுசெய்யப்பட்டிருக்கிறது.

## அரசின் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள்

## அரசிறை மற்றும் கொடைகள்

### அரசிறை

- **2016இற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி, 2016இன் மொத்த அரச அரசிறை ரூ.1,546.0 பில்லியனுக்கு 6.3 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.** மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, மொத்த அரசிறை 2016இல் 12.6 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டதுடன் இது 11.5 சதவீதமான வரி அரசிறையினையும் 1.1 சதவீதமான வரியல்லா அரசிறையினையும் உள்ளடக்கியிருந்தது.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில், மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசின் அரசிறை, 2015இன் தொடர்பான காலப்பகுதியின் 6.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7.0 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு வரி அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.** இக்காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் மொத்த அரச அரசிறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.721.5 பில்லியனிலிருந்து ரூ.863.7 பில்லியனுக்கு 19.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பான வரிகளிலிருந்து, குறிப்பாக பெறுமதிசேர் வரி, துறைமுகம் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வைகள், இறக்குமதித் தீர்வைகள், செஸ் தீர்வை, சிறப்புப் பண்டத் தீர்வை மற்றும் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி என்பனவற்றிலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். அதேவேளை, கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரிகள், பொருளாதார மேலதிகக் கட்டணம் மற்றும் பிடித்துவைத்தல் வரி என்பனவற்றின் அதிகரித்த அரசிறையின் காரணமாக வருமான வரிகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்களும் மேம்பட்டன. எனினும், உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு, 2015இன் பிற்பகுதியில் கலால் தீர்வையினைக் கணிக்கும் நோக்கத்திற்காக உந்து ஊர்திகளின் சுங்கப் பெறுமதியினைக் கணிக்கும் புதிய முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டமையினதும் 2016 மேயில் கலால் தீர்வையின் அலகு வீதம் அதிகரித்தமையினதும் முக்கிய விளைவாக ஊர்திகளின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். வரியல்லா அரசிறைப் பக்கத்தில், வாடகை மற்றும் வட்டி, கட்டணம் மற்றும் விதிப்புக்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புக்கள் என்பனவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைக் காட்டியது. அதேவேளை, இக்காலப்பகுதியில் மொத்த அரசிறை சேகரிப்புக்கள் முன்னேற்றமொன்றினைக் காட்டி 2015இன் தொடர்பான காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட 47.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டு மதிப்பீடான

**அட்டவணை 6.1 அரசிறையின் பொருளாதாரப் பகுப்பாய்வு**

ரூ. பில்லியன்

| விடயம் | 2014 | 2015 (அ) | 2016 திருத்தப்பட்ட மதிப்பீடுகள் | 2015 சன-யூலை (அ) | 2016 சன-யூலை (அ) |
|---|---|---|---|---|---|
| **வரி வருமானம்** | **1,050.4** | **1,355.8** | **1,412.0** | **663.3** | **798.7** |
| வருமான வரி | 198.1 | 262.6 | 226.0 | 98.0 | 126.8 |
| பெறுமதி சேர் வரி | 275.4 | 219.7 | 315.0 | 123.2 | 155.3 |
| கலால் வரிகள் | 256.7 | 497.7 | 444.0 | 256.3 | 255.0 |
| இறக்குமதித் தீர்வைகள் | 81.1 | 132.2 | 125.0 | 53.7 | 85.7 |
| துறைமுகங்கள் மற்றும் வானூர்தி தீர்வை | 68.6 | 58.6 | 92.0 | 30.0 | 49.1 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 44.6 | 45.0 | 54.0 | 24.0 | 31.3 |
| சிறப்புப் பண்டத் தீர்வை | 48.0 | 52.3 | 60.0 | 31.0 | 35.7 |
| செஸ் | 38.7 | 46.3 | 55.0 | 23.7 | 32.9 |
| ஏனைய வரிகள் | 39.2 | 41.4 | 41.0 | 23.3 | 26.8 |
| **வரி அல்லா வருமானம்** | **144.8** | **99.1** | **134.0** | **58.2** | **64.9** |
| **மொத்த வருமானம்** | **1,195.2** | **1,454.9** | **1,546.0** | **721.5** | **863.7** |

மூலம்: நிதி அமைச்சு

(அ) தற்காலிகமானது

வரைபடம் 6.1 அரசிறையின் உள்ளடக்கம் (சன - யூலை 2016)




ரூ.1,546.0 பில்லியனில் 55.9 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. எனினும், இக்காலப்பகுதியில் சராசரி மாதாந்த அரசிறை, 2016இற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டில் காணப்பட்ட ரூ.128.8 பில்லியன் கொண்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ ரூ.123.4 பில்லியனாக மாத்திரம் இருந்தது.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் வருமான வரியிலிருந்தான அரசிறை 29.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரிகள், பொருளாதாரப் பணிக் கட்டணம் மற்றும் பிடித்துவைத்தல் வரி என்பனவற்றிலிருந்தான அதிகரித்த அரசிறையே முக்கிய காரணமாகும்.** இதற்கமைய, மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, வருமான வரிகளிலிருந்தான அரசிறையும் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் 0.9 சதவீதத்திலிருந்து 1.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. கம்பனி மற்றும் கம்பனி அல்லாத வருமான வரிகளிலிருந்தான அரசிறை பெயரளவு நியதிகளில் ரூ.43.0 பில்லியனிலிருந்து ரூ.60.1 பில்லியனுக்கு 39.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உள்நாட்டரசிறைத் திணைக்களத்தின் கண்காணிப்பும் மேற்பார்வையும் வலுப்படுத்தப்பட்டமையும் அரசிறைச் சேகரிப்புக்கள் தன்னியக்கப்படுத்தப்பட்டமையுமே முக்கிய காரணங்களாகும். இக்காலப்பகுதியில், பிடித்துவைத்தல் வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் ரூ.34.7 பில்லியனிலிருந்து ரூ.39.1 பில்லியனுக்கு 12.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரச பிணையங்களின் வழங்கல் மற்றும் சந்தை வட்டி வீதங்களிலான அதிகரிப்பே காரணமாகும். பொருளாதார பணிக் கட்டணங்களிலிருந்தான அரசிறையும் 2015இன் முதல் ஏழு மாத காலப்பகுதியின் ரூ.4.1 பில்லியனிலிருந்து பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் ரூ.11.0 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு இலாபங்களை உழைக்கும் வியாபாரங்களுக்கு வழங்கப்பட்ட விலக்கல்கள் அகற்றப்பட்டமையும் வீதம் 2016 ஏப்பிறலிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 0.25 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமையும் முக்கிய காரணங்களாகும். 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் உழைக்கும் போதே செலுத்தும் வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் ஏழு மாத காலப்பகுதியின் ரூ.16.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.16.6 பில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது.

- **மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை 2015இன் முதல் ஏழு மாத காலப்பகுதியின் 1.1 சதவீதத்திலிருந்து 1.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. பெயரளவு நியதிகளிலும் கூட, உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதியுடன் தொடர்பான நடவடிக்கைகள் இரண்டின் மீதுமான பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.123.2 பில்லியனிலிருந்து ரூ.155.3 பில்லியனுக்கு 26.1 சதவீதத்தினால் அதிகரித்தது.** உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்தான பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியின் ரூ.76.4 பில்லியனிலிருந்து 96.5 பில்லியனுக்கு 26.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உள்நாட்டரசிறைத் திணைக்களத்தின் தன்னியக்க முறையிலான அரசிறைச் சேகரிப்பும் இதன் மூலம் தொழில்நுட்பத் தவறுகள் திருத்தப்பட்டமையும் அதிகரித்த இணங்குவிப்புக்களும் மேம்பட்ட உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளுமே காரணங்களாகும். இதேபோன்று இறக்குமதிகள் மீதான பெறுமதிசேர் வரிகளிலிருந்தான அரசிறையும் 2015இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.46.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.58.9 பில்லியனுக்கு 25.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பெறுமதிசேர் வரி செலுத்தப்பட வேண்டிய இறக்குமதிகள் அதிகரித்தமையே காரணமாகும். மேலும், 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மொத்த வரி அரசிறையின் சதவீதமாக பெறுமதிசேர் வரி அரசிறை 2015இன் தொடர்பான காலப்பகுதியின் 18.6 சதவீதத்திலிருந்து 19.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக கலால் வரியிலிருந்தான அரசிறை 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.1 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு உந்து ஊர்திகள் மீதான கலால் வரியிலிருந்தான அரசிறை வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.** பெயரளவு நியதிகளிலும் கூட, கலால் வரியிலிருந்தான அரசிறை 2015இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.255.0 பில்லியனுக்கு 0.5 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியில் பெற்றோலியம், புகையிலை மற்றும் சிகரெட்டுக்கள் மற்றும் குடிவகை மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியைப் பதிவுசெய்த போதும் உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. தெரிந்தெடுக்கப்பட்ட உந்து ஊர்திகள் மீதான வரிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, 2015இன் பிற்பகுதியிலிருந்து கலால் தீர்வையின் கணிப்பு நோக்கங்களுக்காக உந்து ஊர்திகளுக்காகப் புதிய மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளின் விளைவாக சந்தை வட்டி வீதங்கள் உயர்வடைந்து வருகின்றமை என்பனவற்றின் முக்கிய காரணமாக 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் உந்து ஊர்திகளின் இறக்குமதியில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கொன்று காணப்பட்டமையின் காரணமாக உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.143.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.101.7 பில்லியனுக்கு 28.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. எனினும், 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் குடிவகை மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.69.3 பில்லியனுக்கு 21.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2015இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியின் பிற்பகுதியில் தேறல் குடிவகையின் உற்பத்தி குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்த போதும் வரி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகியது. அதேவேளை, 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் புகையிலை மற்றும் சிகரட் என்பனவற்றின் கலால் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.50.6 பில்லியனுக்கு 7.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வரி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறை ரூ.24.0 பில்லியனிலிருந்து ரூ.31.3 பில்லியனுக்கு 30.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இது 0.2 சதவீதத்திலிருந்து 0.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.** உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதியுடன் தொடர்பான நடவடிக்கைகள் இரண்டின் மீதுமான தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறை 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் அதிகரித்தது. இதன்படி, உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மீதான தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டில் இதே காலப்பகுதியின் ரூ.15.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.21.0 பில்லியனுக்கு 37.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட முன்னேற்றமே காரணமாகும். இறக்குமதியுடன் தொடர்பான நடவடிக்கைகள் மீதான தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி 2015இன் முதல் ஏழு மாத காலப்பகுதியின் ரூ.8.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.10.2 பில்லியனுக்கு 18.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இறக்குமதிகளுக்கு ஏற்புடைத்தான தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி அதிகரித்தமையே காரணமாகும்.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் இறக்குமதித் தீர்வைகள், துறைமுகம் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வை, செஸ் தீர்வை மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வை போன்ற அனைத்து இறக்குமதிகளுடன் தொடர்பான வரிகள் மற்றும் தீர்வைகளிலிருந்தான அரசிறை அதிகரித்தது.** இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறை, 2015இன் அதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூ.53.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.85.7 பில்லியனுக்கு 59.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அதிகரித்த இறக்குமதிகளும் அவற்றிற்கு ஏற்புடைத்தான இறக்குமதித் தீர்வைகளும் கண்காணிப்புச் செயன்முறைகள் வலுப்படுத்தப்பட்டமையுமே காரணங்களாகும். துறைமுகம் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.30.0 பில்லியனிலிருந்து ரூ.49.1 பில்லியனுக்கு 63.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து துறைமுகம் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித்

தீர்வை வீதம் 5.0 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதத்திற்கு அதிகரித்தமையின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. செஸ் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.32.9 பில்லியனுக்கு 38.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு புதிய விடயங்களின் மீது விதிக்கப்பட்ட செஸ் தீர்வையும் 2015இன் பிற்பகுதியில் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களின் மீதான செஸ் வீதங்கள் அதிகரிக்கப்பட்டமையும் முக்கிய காரணங்களாக அமைந்தன. சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.31.0 பில்லியனிலிருந்து ரூ.35.7 பில்லியனுக்கு 15.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அறுவடை காலப்பகுதியில் உள்நாட்டுச் சந்தையின் அதிகரித்த கிடைப்பனவினை கருத்திற் கொண்டு பல பண்டங்களின் மீதான சிறப்புப் பண்டத் தீர்வையினை அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரியல்லா அரசிறை 2015இன் இதே காலப்பகுதியினதைப் போன்று 0.5 சதவீதத்தில் தொடர்ந்தும் மாற்றமின்றி காணப்பட்டது.** எனினும், பெயரளவு நியதிகளில் வரியல்லா அரசிறை 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.58.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.64.9 பில்லியனுக்கு 11.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இப்பெயரளவு அதிகரிப்பிற்கு வரியல்லா அரசிறை மூலங்களில் அதாவது கட்டணம் மற்றும் விதிப்புக்கள், வாடகை, வட்டி வருமானம் மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். கட்டணம் மற்றும் விதிப்புக்களிலிருந்தான அரசிறை 2015இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.24.0 பில்லியனிலிருந்து ரூ.29.9 பில்லியனுக்கு 24.8 சதவீதத்தினால் அதிகரித்தன. வாடகை மற்றும் வட்டி வருமானமும் 2015இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.3.5 பில்லியனிலிருந்து 2016இன் முதல் ஏழு மாத காலத்தில் ரூ.4.5 பில்லியனுக்கு 29.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியமைக்கு உள்நாட்டுச் சந்தையில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதங்களே காரணமாகும். எனினும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபங்களும் பங்கிலாப மாற்றல்களும் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.21.3 பில்லியனிலிருந்து இக்காலப்பகுதியில் ரூ.19.3 பில்லியனுக்கு 9.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

### கொடைகள்

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வெளிநாட்டுக் கொடைகளின் பகிர்ந்தளிப்பு 2016இற்கான வருடாந்த மதிப்பீட்டிற்குக் குறிப்பிடத்தக்களவு கீழே காணப்பட்டது.** இதன்படி, இக்காலப்பகுதியில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கொடைகளின் தொகை 2016இற்கான ஆண்டு மதிப்பீடான ரூ.10.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.0.5 பில்லியனாகக் காணப்பட்ட போதும் 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.0.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றத்தினைக் காட்டியது.

### செலவினமும் தேறிய கடன் வழங்கலும்

- **2016இற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2015இன் மொ.உ.உற்பத்தியின் 20.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 18.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டது.** மீண்டெழும் செலவினம் 2015இன் மொ.உ.உற்பத்தியின் 15.2 சதவீதத்திலிருந்து 14.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென மதிப்பிடப்பட்ட வேளையில் 2016இல் மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2015இல் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 5.3 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 4.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டது. பெயரளவு நியதிகளில் 2016இல் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2015இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,290.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.2,215.0 பில்லியனுக்கு 3.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததாக மதிப்பிடப்பட்டது. மீண்டெழும் செலவினம் 2016இல் ரூ.1,724.0 பில்லியனுக்கு 1.3 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்ட வேளையில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் ரூ.491.0 பில்லியனுக்கு 16.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2015இன் இதே காலப்பகுதியின் மொ.உ.உற்பத்தியின் 10.8 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 10.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு**

**அட்டவணை 6.2 செலவினத்தின் பொருளாதாரப் பகுப்பாய்வு**

ரூ. பில்லியன்

| விடயம் | 2014 | 2015 (அ) | 2016 திருத்தப்பட்ட மதிப்பீடுகள் | 2015 சன-யூலை (அ) | 2016 சன-யூலை (அ) |
|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **1,322.9** | **1,701.7** | **1,724.0** | **954.2** | **1,006.8** |
| இதில் சம்பளங்களும் கூலிகளும் | 441.0 | 561.7 | 590.0 | 319.6 | 331.5 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 436.4 | 509.7 | 562.0 | 327.7 | 370.4 |
| வெளிநாட்டு | 108.5 | 115.4 | 82.0 | 79.7 | 69.9 |
| உள்நாட்டு | 327.9 | 394.3 | 480.0 | 248.0 | 300.6 |
| சமுர்த்தி | 15.0 | 40.0 | 44.0 | 23.1 | 23.9 |
| ஓய்வூதியங்கள் | 126.1 | 155.3 | 169.0 | 87.0 | 99.4 |
| வளமாக்கி மானியம் | 31.8 | 49.6 | 35.0 | 18.3 | 13.1 |
| **மூலதன மற்றும் தேறிய கடன்** | **473.0** | **588.7** | **491.0** | **270.8** | **290.1** |
| மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும் | **1,795.9** | **2,290.4** | **2,215.0** | **1,225.1** | **1,296.9** |

மூலம் : நிதி அமைச்சு

(அ) தற்காலிகமானது

**வரைபடம் 6.2 அரச செலவினத்தின் உள்ளடக்கம் (சன - யூலை 2016)**




**மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.** எனினும், 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில், அரச செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,225.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,296.9 பில்லியனுக்கு 5.9 சதவீதத்தினால் அதிகரித்தன. 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 60.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இன் திருத்தப்பட்ட ஆண்டு மதிப்பீட்டின் 58.5 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறியது.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மீண்டெழும் செலவினம் 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 8.4 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 8.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** எனினும், பெயரளவு நியதிகளில் மீண்டெழும் செலவினம் 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.954.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் ரூ.1,006.8 பில்லியனுக்கு 5.5 சதவீதத்தினால் அதிகரித்தது. சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் 2015இன் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.319.6 பில்லியனிலிருந்து ரூ.331.5 பில்லியனுக்கு 3.7 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினமும் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.327.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.370.4 பில்லியனுக்கு 13.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு, உள்நாட்டுச் சந்தையில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதங்களும் பல்வேறு வட்டி வீதங்களில் பெறப்பட்டுள்ள கடன்களைப் பாதிக்கின்ற வெளிநாட்டு வட்டி வீதங்களில் காணப்படுகின்ற படிப்படியான அதிகரிப்பும் காரணங்களாகும். ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ரூ.99.4 பில்லியனுக்கு 14.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும் பொது நிருவாக சுற்றறிக்கை எண் 03/2016இன்படி, அரச ஊழியர்களின் சம்பளங்கள் புதிய சம்பள அளவுகளுக்கு மாற்றப்பட்டமையும் காரணங்களாக அமைந்தன. அதேவேளை, 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான செலவினம் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.23.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.23.9 பில்லியனுக்கு 3.5 சதவீதத்தினால் அதிகரித்தது. வளமாக்கி உதவுதொகை மீதான செலவினம் 2015இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.18.3 பில்லியனிலிருந்து ரூ.13.1 பில்லியனுக்கு 28.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2015இன் தொடர்பான காலத்தினைப் போன்று 2.4 சதவீதத்தில் எவ்வித மாற்றமுமின்றிக் காணப்பட்டது.** எனினும், பெயரளவு நியதிகளில் இது 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.270.8 பில்லியனிலிருந்து இக்காலப்பகுதியில் ரூ.290.1 பில்லியனுக்கு 7.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் தேறப்பட்ட மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் இவ்வாண்டிற்காகத் திருத்தப்பட்ட ஆண்டு மதிப்பீட்டின் 59.1 சதவீதத்திற்கு வகைகூறின.

### முக்கிய இறை மீதிகள்

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் முக்கிய இறை மீதிகள் மேம்பாடொன்றினைக் காட்டியமைக்கு, மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகத் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2015இன் தொடர்பான காலப்பகுதியின் 4.4 சதவீதத்திலிருந்து இக்காலப்பகுதியில் 3.5 சதவீதத்திற்கு வீழ்ச்சி அடைந்தமையே காரணமாகும்.** பெயரளவு நியதிகளில், திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.503.3 பில்லியனிலிருந்து ரூ.432.7 பில்லியனுக்கு மேம்பட்டு, குறிப்பாக, அரசிறையை உயர்த்துவதற்கும் மீண்டெழும் செலவினங்களினைச் சிக்கனப்படுத்துவதற்கும் அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளைப் பிரதிபலித்தது. அதேவேளை, ஆரம்ப பற்றாக்குறை (வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக திரண்ட பற்றாக்குறை) 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1.7 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 0.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையும் (அரசின் குறைச் சேமிப்புக்கள்) 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.1 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 1.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

### வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடல்

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் ரூ.432.7 பில்லியன் கொண்ட திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை முக்கியமாக உள்நாட்டு மூலங்களினூடாகவே நிதியிடப்பட்டது.** இதன்படி, இக்காலப்பகுதியில் தேறிய உள்நாட்டு நிதியிடல் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.545.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.409.8 பில்லியனாகக் காணப்பட்டவிடத்து, பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.41.8 பில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் ரூ.22.9 பில்லியனாகக் காணப்பட்டது.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் உள்நாட்டு மூலங்களிலிருந்தான கடன்பாடுகளில் தங்கியிருந்தமை, 2015இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அளவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இக்காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.** வங்கி நிதியிடல் ரூ.234.2 பில்லியனாக விளங்கி மொத்த உள்நாட்டு நிதியிடலில் 57.2 சதவீதத்திற்கு வகைகூறியது. இது 2015இல் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.319.4 பில்லியனிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்களவு குறைவாகக் காணப்பட்ட போதும் இது 2016இற்கான மதிப்பிடப்பட்ட தொகையான ரூ.182.0 பில்லியனிலும் பார்க்க உயர்வாகவே காணப்பட்டது. இக்காலப்பகுதியில் மத்திய வங்கியிலிருந்தான நிதியிடல் ரூ.68.9 பில்லியனிலிருந்து ரூ.226.2 பில்லியனுக்குக் கணிசமாக அதிகரித்தது. எனினும், 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வர்த்தக

**வரைபடம் 6.3 முக்கிய இறைக் குறிகாட்டிகள்**




**அட்டவணை 6.3 நிதியீட்டல் மூலங்கள்**

ரூ. பில்லியன்

| விடயம் | 2014 | 2015 (அ) | 2015 சன-யூலை (அ) | 2016 சன-யூலை (அ) |
|---|---|---|---|---|
| **உள்நாட்டு நிதியிடல் (ஆ)** | **378.7** | **592.7** | **545.2** | **409.8** |
| வங்கி | 126.9 | 291.8 | 319.4 | 234.2 |
| வங்கியல்லா | 251.8 | 300.9 | 225.8 | 175.6 |
| **வெளிநாட்டு நிதியிடல;** | **212.5** | **236.8** | **-41.8** | **22.9** |
| கடன்கள் | 211.7 | 364.0 | 2.4 | 35.0 |
| திறைசேரி முறிகளின் மீது வதிவற்றோரின் முதலீடுகள் | 15.0 | -79.9 | -11.4 | -15.8 |
| திறைசேரி உண்டியல்களின் மீது வதிவற்றோரின் முதலீடுகள் | -14.2 | -47.3 | -32.9 | 3.7 |
| **மொத்த நிதியிடல்** | **591.2** | **829.5** | **503.3** | **432.7** |

(அ) தற்காலிகமானது

(ஆ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அரசிற்குச் சொந்தமான வியாபார முயற்சிகளை மறுசீரமைப்பதற்காக திறைசேரி முறிகள் ஊடாக வழங்கப்பட்ட நிதிகள் நீங்கலாக.

மூலங்கள்: நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

வங்கித்தொழில் துறையிலிருந்தான நிதியிடல் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.250.5 பில்லியனிலிருந்து ரூ.8.1 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. இது ஆய்விற்குரிய ஆண்டில் வங்கித்தொழில் துறையிலிருந்தான மொத்த நிதியிடல் வீழ்ச்சியடையப் பெருமளவிற்குப் பங்களித்தது. 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் உள்நாட்டு வங்கியல்லாத் துறையிலிருந்தான தேறிய நிதியிடலும் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.225.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.175.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் உள்நாட்டுக் கடன்பாடுகள் முக்கியமாக படுகடன் சாதனங்களினூடாக, குறிப்பாக திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களினூடாக பெறப்பட்டன.** 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலிருந்தான தேறிய கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே ரூ.284.6 பில்லியன் மற்றும் ரூ.99.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் முறையே ரூ.339.4 பில்லியனாகவும் ரூ.57.6 பில்லியனாகவும் காணப்பட்டன. திறைசேரி உண்டியல் மூலமான மொத்தத் தேறிய கடன்பாடுகளில் மத்திய வங்கியின் பங்களிப்பு ரூ.60.1 பில்லியனிலிருந்து ரூ.192.3 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து வர்த்தக வங்கிகளுக்கும் வங்கியல்லாத் துறைக்குமான திறைசேரி உண்டியல்களின் குறிப்பிடத்தக்களவு மீள்கொடுப்பனவினைப் பிரதிபலித்தது. எனினும், பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளினூடான தேறிய கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் ரூ.170.2 பில்லியனிலிருந்து ரூ.13.4 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து, பாரிய மீள்கொடுப்பனவினைப் பிரதிபலித்தது.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.41.8 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் ரூ.22.9 பில்லியனாகக் காணப்பட்டது.** வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்களின் பகிர்ந்தளிப்பு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவும் திறைசேரி முறிகளின் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு உடைமைகளின் தேறிய வெளிப்பாய்ச்சல் தொடர்ச்சியாகவும் காணப்பட்ட போதும் இக்காலப்பகுதியில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகளில் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டமையும் அதிகரித்த திறைசேரி உண்டியல்களின் வெளிநாட்டு உடைமைகளும் இக்காலப்பகுதியில் வெளிநாட்டுக் கடன்பாடுகள் அதிகரிக்க முக்கியமாகப் பங்களித்தன. தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூ.37.4 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகளின் பயன்பாடு, ரூ.3.7 பில்லியன் கொண்ட திறைசேரி முறிகளின் தேறிய வெளிநாட்டு முதலீடுகள், திறைசேரி முறிகளிலுள்ள வெளிநாட்டு முதலீடுகளின் ரூ.15.8 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுகள் மற்றும் வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்களின் ரூ.2.4 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

வரைபடம் 6.4 பற்றாக்குறைக்கான நிதியீட்டம்




### அரச படுகடன் மற்றும் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

### அரச படுகடன்

- **2016 யூலை இறுதியில் மொத்த வெளிநின்ற மத்திய அரசின் படுகடன் 2015 இறுதியின் ரூ.8,503.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.9,382.0 பில்லியனுக்கு ரூ.878.7 பில்லியனால் அதிகரித்தது.** வெளிநின்ற படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உயர்ந்த உள்நாட்டுக் கடன்பாடுகள், 2016 யூனில் வெளிநாட்டு நாணயத் தவணை நிதியிடல் வசதியின் வழங்கல், 2016 யூலையில் நாட்டிற்கான பன்னாட்டு முறியின் வழங்கல் மற்றும் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. 2016இன் முதல் ஏழு

மாத காலப்பகுதியில் மொத்தப் படுகடன் ரூ.141.7 பில்லியனால் அதிகரித்தமைக்கு முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக ரூபா தேய்வடைந்தமையின் விளைவாக செலாவணி வீதங்கள் வேறுபட்டமையே காரணமாகும். இதன்படி, வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ.133.0 பில்லியனால் அதிகரித்த வேளையில், வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் ரூ.8.7 பில்லியனால் அதிகரித்தமைக்கு வெளிநாட்டுச் செலாவணி வேறுபாடுகளே காரணமாகும். மேலும், கழிவிடல் காரணி (இது திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் வழங்கல் மற்றும் முதிர்ச்சியின் முகப்புப் பெறுமதிக்கும் ஏட்டுப் பெறுமதிக்குமிடையிலான தேறிய வேறுபாடு) படுகடன் ரூ.70.1 பில்லியனால் அதிகரிக்கப் பங்களித்ததுடன் இதற்கு ஆய்விற்குரிய காலப்பகுதியில் அரச பிணையங்கள் கழிவிடலில் வழங்கப்பட்டமையே காரணமாகும். உள்நாட்டுப் படுகடன் ரூ.501.2 பில்லியனால் ரூ.5,460.4 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் வெளிநாட்டுக் கடன்பாடு ரூ.377.5 பில்லியனால் ரூ.3,921.5 பில்லியனுக்கு அதிகரித்தது.

- **2016 யூலை இறுதியிலுள்ளவாறு மொத்த உள்நாட்டுப் படுகடனில், குறுங்காலப் படுகடன் 8.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடகளும் கூட 2015இன் இறுதியிலிருந்து 10.4 சதவீதத்தினால் அதிகரித்தது.** மொத்த உள்நாட்டுப் படுகடனில் குறுங்காலப் படுகடனின் பங்கு 2015 இறுதியின் 18.4 சதவீதத்திலிருந்து 2016 யூலை இறுதியில் 18.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. மாறாக, மொத்த உள்நாட்டுப் படுகடனில் நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடனின் பங்கு 2015 இறுதியின் 81.6 சதவீதத்துடன் ஒப்பிடுயையில் 2016 யூலை இறுதியில் 81.8 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டுப் படுகடனில் திறைசேரி உண்டியல்களின் பங்கு 2015இல் பதிவுசெய்யப்பட்ட மட்டத்துடன் ஒப்பிடுகையில் 13.3 சதவீதத்தில் தொடர்ந்தும் மாற்றமின்றிக் காணப்பட்டது. வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலில் முனைப்பாகக் காணப்படும் திறைசேரி முறிகளின் பங்கு 2015 இறுதியின் 66.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 யூலை இறுதியில் 67.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், 2016 யூலை இறுதியில் மொத்த உள்நாட்டுப் படுகடனில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் பங்கு 2015 இறுதியின் 13.5 சதவீதத்திலிருந்து 12.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இக்காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிட இலங்கை அபிவிருத்தி முறிகளில் தங்கியிருப்பது ஒப்பீட்டு ரீதியில் குறைவடைந்தமையே காரணமாகும்.

வரைபடம் 6.5 வெளிநின்ற அரச படுகடன்




அட்டவணை 6.4 வெளிநின்ற அரச படுகடன்

ரூ. பில்லியன்

| விடயம் | 2014 | 2015 (அ) | 2015 யூலை இறுதி(அ) | 2016 யூலை இறுதி(அ) |
|---|---|---|---|---|
| **உள்நாட்டு படுகடன் (ஆ)** | **4,277.8** | **4,959.2** | **4,862.2** | **5,460.4** |
| முதிர்ச்சி காலப்பகுதியின்படி | | | | |
| குறுங்காலம் | 941.2 | 913.3 | 1,104.8 | 994.3 |
| நடுத்தரம் மற்றும் நீண்டகாலம் | 3,336.6 | 4,045.9 | 3,757.4 | 4,466.1 |
| நிறுவனங்களின்படி | | | | |
| வங்கிகள் (இ) | 1,669.9 | 1,924.0 | 1,875.5 | 2,155.3 |
| வங்கியல்லாத்துறை | 2,607.9 | 3,035.2 | 2,986.7 | 3,305.2 |
| **வெளிநாட்டுப்படுகடன்** | **3,113.1** | **3,544.0** | **3,139.9** | **3,921.5** |
| சலுகைக் கடன்கள் | 1,491.0 | 1,729.9 | 1,540.6 | 1,833.2 |
| சலுகையல்லாக் கடன்கள் | 1,622.1 | 1,814.1 | 1,599.3 | 2,088.3 |
| **மொத்த அரச படுகடன்** | **7,390.9** | **8,503.2** | **8,002.1** | **9,382.0** |

மூலங்கள்: நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

(ஆ) 2003 நவெம்பரில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்கப்பட்ட ரூ. 4,397 மில்லியன் பெறுமதியுடைய அரச திறைசேரி முறிகள், 2012 சனவரியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு கொடுக்கப்பட வேண்டியவற்றைத் தீர்ப்பதற்காக வழங்கப்பட்ட ரூ. 78,447 மில்லியன், 2013 மார்ச்சில் சிறிலங்கன் எயார்லைனை மூலதனமாக்குவதற்கு வழங்கப்பட்ட ரூபா. 13.125 மில்லியன் நீங்கலாக

(இ) ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் வெளிநின்ற பெறுமதிகள் உள்ளடங்களாக

- **2016 யூலை இறுதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் 2015 இறுதியின் ரூ.690.1 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 4,790.1 மில்லியன்) ரூ.712.2 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 4,886.3 மில்லியன்) ரூ.22.1 பில்லியனால்**

**வரைபடம் 6.6** அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகளும் அரசிறையும்




**அதிகரித்தது.** இதன்படி, 2016 யூலை இறுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்தான வெளிநின்ற கடன்பாடுகள் ரூ.690.3 பில்லியனாகவும் (ஐ.அ.டொலர் 4,736.3 மில்லியன்) கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான வெளிநின்ற கடன்பாடுகள் ரூ.21.9 பில்லியனாகவும் (ஐ.அ.டொலர் 150.0 மில்லியன்) காணப்பட்டன. 2016 யூலை இறுதியில் மொத்த உள்நாட்டுப் படுகடனுக்கான வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடனின் பங்கு 2015 இறுதியின் 13.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 13.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

- **மொத்த வெளிநாட்டுப் படுகடனில் சலுகையல்லாப் படுகடனின் பங்கு 2015 இறுதியின் 51.2 சதவீதத்திலிருந்து 2016 யூலை இறுதியில் 53.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.** மாறாக 2016 யூலை இறுதியில் மொத்த வெளிநாட்டுப் படுகடனில் சலுகை ரீதியான படுகடனின் பங்கு 2015 இறுதியின் 48.8 சதவீதத்திலிருந்து 46.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சலுகையல்லா படுகடன் 15.1 சதவீதத்தினால் ரூ.2,088.3 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு வர்த்தகக் கடன்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

## படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

- **ஆரம்ப மதிப்பீடுகளின்படி, 2016இல் மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ.1,169.3 பில்லியனாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது 2015இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,317.8 பில்லியனிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்களவு குறைவானதாகும்.** இவ்வீழ்ச்சிக்கு 2015 சனவரியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சிக்கெதிராக 2016இல் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சி எதுவும் காணப்படாமையே முக்கிய காரணமாகும். மதிப்பிடப்பட்ட மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவான ரூ.648.9 பில்லியனையும் வட்டிக் கொடுப்பனவான ரூ.520.5 பில்லியனையும் உள்ளடக்கியிருந்தன. உள்நாட்டுப் படுகடன் மீதான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ.505.4 பில்லியனாக இருக்குமென மதிப்பிடப்பட்ட வேளையில் வெளிநாட்டுப் படுகடன் மீதான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2016இல் ரூ.143.4 பில்லியனாக இருக்குமென மதிப்பிடப்பட்டது. 2016இல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முறையே ரூ.441.2 பில்லியனாகவும் ரூ.79.2 பில்லியனாகவும் மதிப்பிடப்பட்டன. எனினும், சந்தை வட்டி வீதங்களில் ஏற்பட்ட அபிவிருத்திகளுடன் மதிப்பிடப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகள் இவ்வாண்டுப் பகுதியில் ரூ.562.0 பில்லியனுக்குத் திருத்தப்பட்டன.

- **2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில், மொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ.766.4 பில்லியனாக விளங்கின.** இது ரூ.396.0 பில்லியன் (51.7 சதவீதம்) கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் ரூ.370.4 பில்லியன் கொண்ட (48.3 சதவீதம்) வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியிருந்தது. மேலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களுக்கான படுகடன் பணிக் கொடுப்பனவுகள் முறையே ரூ.583.1 பில்லியனாகவும் ரூ.183.3 பில்லியனாகவும் விளங்கின. 2016இன் யூலை வரை மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள், திருத்தப்பட்ட ஆண்டு மதிப்பீடுகளில் 63.3 சதவீதமாக விளங்கி திருத்தப்பட்ட ஆண்டு மதிப்பீட்டில் 61.0 சதவீதத்திற்கு வகைகூறிய கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவையும் ஆண்டு மதிப்பீட்டில் 65.9 சதவீதத்திற்கு வகைகூறிய வட்டிக் கொடுப்பனவையும் உள்ளடக்கியிருந்தது.